# தெருக்கூத்து

**பேரா.சே.ஜாஸ்மின். ஷி.பானா**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை,**
**ஹாஜி கருத்த ராவுத்தர் ஹெதியா கல்லூரி,**
**உத்தமபாளையம், தேனி மாவட்டம்.**

67

**முன்னுரை:-**

தமிழர்களின் பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் கலைகளில் கூத்தும் ஒன்றாக விளங்குகிறது. நெஞ்சை அள்ளும் நிகழ்த்து கலைகளுள தெருக்கூத்தும் ஒன்று. சிறப்பும் பழமையும் வாய்ந்த கூத்துக் கலையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முத்தமிழ் விளக்கம்:-**

கூத்துக்கலை இசைக்கலையைப் போலவே பழமை வாய்ந்தது என்பார் மயிலை சீனிவேங்கடசாமி. தமிழ் முத்தமிழ் என வழங்கப்படுகின்றது. இயல் ,இசை, கூத்து என்பன முத்தமிழின் கூறுகள், வரி வடிவத்தில் இன்பம் பயப்பது ‘இயல்’ என்றும் ஒலிநயத்துடன் பாடப்பெறும் பொழுது இசையுடன் இயைந்து ‘இசை’ என்றும் மெய்ப்பாடுகளினால் வெளிப்படுவது ‘கூத்து’ என்றும் வழங்கப்படுகிறது. ஆடற்கலையும் நடிப்புக்கலையும் ஒருங்கே வளர்ந்தவை ‘பாவ, ராக, தாள’ வகை கொண்டு பதத்தால் பாட்டுக்கு இயைய நடிப்பது கூத்து என்பதை முதன்முதலில் ‘நாடகம்’ எனக் குறிப்பிட்டவர் இளங்கோவடிகள்.

**இலக்கியங்களில் கூத்து:-**

கூத்து என்னும் சொல் “நாட்டியம்” “நாடகம்” ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாக வழங்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் ‘கூத்து’ கூத்தர் என்னும் சொற்கள் உள்ளன. சங்க இலக்கியங்களிலும் ‘கூத்து’ என்னும் சொல் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது.

“கூத்தர் ஆடுகளம் கடுக்கும்” (புறம் 28)

“இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து” (சிலம்பு 3:12)

“நாட்டியம் நன்னூல் நன்கு கடைப்பிடித்து” (சிலம்பு 3:46)

“நாடகமேத்தும் நாடகக் கணிகை” (சிலம்பு பதிகம் 15)

“கூத்தாட்டு அவைக்கறம்” (திருக்குறள் 332)

என்று சங்க இலக்கியங்களில் கூத்துக்கலை பற்றிய செய்திகள் பயின்று வருகின்றன.

வேடம் புனைந்து இரவு தொடங்கி விடியும் வரை கதை தழுவி ஆடப்படும் நாடகமே கூத்து ஆகும். கூத்து என்ற சொல் முதலில் நடனத்தையும் பின்னர் கதை தழுவி வரும் நாடகத்தையும் குறித்தது. கூத்து நடத்தப்பட்ட களத்தை ஒட்டிய அவை தெருக்கூத்து எனப்பட்டது.

மையக்கரு:-

பல தெருக்கூத்து நிகழ்ச்சிகள் மகாபாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த திரௌபதி கதாப்பாத்திரத்தை மையப்படுத்தி அமையும்.

ராமாயணத்தை மையப்படுத்தி தெருக்கூத்து நாடகங்கள் மாரியம்மன் திருவிழாக்களில் நிகழ்த்தப்படுகின்றன.

மேலும் சில நாடகங்களில் உள்ளூர் தெய்வங்களும் அடங்கும்.

காலம்:-

தமிழ்நாட்காட்டியின் முதல் மாதமான சித்திரையில் தொடங்கி இருபத்தி ஒரு நாள் கோயில் திருவிழா உள்ளிட்ட சடங்கு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தெருக்கூத்து நாடகங்கள் உள்ளன. திருவிழாவின் நடுவில் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் தொடங்கி, இறுதி நாளின் காலை வரை தொடர்கின்றது.

ஒப்பனை:-

நடிகர்கள் வண்ணமயமான ஆடைகளை அணிவார்கள் தெருக்கூத்து இசைக்கலைஞர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளில் ஆர்மோனியம், டிரம்ஸ், ஒரு முகவனை (ஒபோவைப்) மற்றும் சிம்பல்கள் ஆகியவை அடங்கும்.

தெருக்கூத்து ஒப்பனையை ‘வேஷமிட்டுக் கொள்வது’, ‘வேஷம் கட்டிக் கொள்வது’, ‘வேஷம் போட்டுக் கொள்வது’ என்று குறிப்பிடுவார்கள்.

தலைக்கீரிடம், புஜகீர்த்திகள், பெரிய காதுகள், மார்பு அணிகள், விரிந்த பெரிய பாவாடை, சலங்கை எனப் பலவற்றைக் கட்டிக் கொள்கிறார்கள். இதனால்தான் ‘வேஷம் கட்டுதல் என்ற சொல்லாட்சி வந்திருக்க வேண்டும்.

பாடல், ஆடல், உரையாடல்:-

கூத்தில் பாடல்கள் முலமாகவே கதை செல்கிறது. வசனம் என்பது பாடலின் கருத்தாக இருக்கிறது. கூத்துப்பாடல்களுக்குத் ‘தரு’ என்று பெயர்.

“ஆலால தோப்புக்குள்ளே
அமர்ந்திருக்கும் நாயகனே – உன்னடிய
பணிந்து வந்தேன் – ஐயா
உத்தமரே காக்கவேணும் !!
தந்தோம் தந்தோம் தனதன
தந்தோம் தனதோம் !! ”

“கட்டிளம் காளையிவன்
கட்டியங்காரன் எந்தன் பெயர்
பார்போற்றும் கலையிதுவின் – ஆமா
தந்தோம் தந்தோம் தனதன
தந்தோம் தனதோம் !! …”

அன்றைய நிலை:-

இத்தகைய தமிழர்களின் தொன்மையான கலைகளுள் ஒன்றான தெருக்கூத்துக்கலை நலிவடைந்து வருவது ஒரு வரலாற்றுச் சோகம்.

கால் நூற்றாண்டுக்கிடையில் தெருக்கூத்துக்கலை மிகப்பெரிய வீழ்ச்சியை எதிர்கொண்டிருக்கிறது. சிற்றூர்களில் அறுவடை முடிந்து உழவர்கள் ஓய்வாக இருக்கும் காலங்களில் கூத்து நிகழ்த்தப்படும். கூத்து நிகழ்த்துவதற்கென்றே ஒவ்வொரு ஊரிலும் திடல் உண்டு. ஒவ்வொரு கலைஞரும் போட்டி போட்டுக்கொண்டு தன் திறமையை வெளிப்படுத்துவர். சிறப்பாக

நடிப்பவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி பார்வையாளர்கள் ஊக்கப்படுத்துவர்.

இன்றைய நிலை:-

இன்றைக்கும் சில ஊர்களில் கூத்து நிகழ்த்தப்படுகிறது. ஆனால் பார்வையாளர்கள், அதிகமின்மையால் கலைஞர்கள் மனதளவில் பாதிப்பு ஏற்பட்டு கலை வெளிப்பாடு குறைகிறது. அது மட்டுமின்றி வணிகமயமாகி வரும் வேளாண்முறை, நகரமயமாகி வரும் வாழ்க்கை முறை, தொலைக்காட்சிகளின் வருகை எனப் பல்வேறு காரணங்களால் தெருக்கூத்துக் கலை மெல்ல மெல்ல நலிவடைந்து வருகிறது.

தெருக்கூத்துக் கலைஞர்களை ஊக்கப்படுத்துதல்:-

கூத்துக்கலைஞர்கள் சங்கம் அமைத்து செயல்பட்டு வருகின்றனர்.

தமிழக அரசும் கூத்துக் கலைஞர்களுக்கு கலைமாமணி போன்ற விருதுகளை வழங்கி ஊக்கப்படுத்துகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியக் கூத்துக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அரசு பொருட்காட்சிகளிலும், கோயில் திருவிழாக்களிலும் கூத்து நிகழ்த்தப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்க வழி செய்துள்ளது.

**முடிவுரை:-**

தமிழர்களின் பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் இக்கலையை, பழமையும், பெருமையும் வாய்ந்த உன்னதமான இந்தக் கலையைப், போற்றிக் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாரும். கூத்துக்கலை மறுமலர்ச்சிக்கான திட்டங்களை அரசு வகுத்துச் செயல்படுத்த வேண்டும்.

**பார்வை நூல்கள்:-**

ப. இரமேஷ் – ‘கூத்துக்கலை – அன்றும் இன்றும்’

முனைவர். சி. சேதுராமன் – தமிழ் இலக்கிய வரலாறு

முனைவர் மு. அருணாச்சலம் – தமிழ் இலக்கிய வரலாறு

வசந்த மண்டபம் – I lavenirlaam blogspot. Com

இந்து தமிழ் திசை

Tamil Wikipedia . Org